


**11. 08. 2026**

## தலைப்புச் செய்திகள்

1. பிரதமர் திரு. நரேந்திரமோடி புதுதில்லியில் The Economics Times உலகத் தலைவர்கள் கூட்டமைப்பு நிகழ்வில் இன்று உரையாற்றுகிறார்.

2. தமிழ்நாட்டில் சூரிய மேற்கூரை அமைப்புகளை ஊக்குவிக்க ஒருங்கிணைந்த வழிகாட்டுதல் திட்டம் வகுக்கப்படுவதாக மாநில எரிசக்தி துறை அமைச்சர் திரு. நிர்மல் குமார் சட்டப்பேரவையில் மானிய கோரிக்கையில் தெரிவித்துள்ளார்.

3. கொசஸ்தலை ஆற்றில் மீன்கள் இறந்து மிதந்த சம்பவம் குறித்து 4 பேர் கொண்ட நிபுணர் குழுவின் விசாரணைக்கு உத்தரவிடப் பட்டுள்ளதாக மாநில சுற்றுச்சூழல் அமைச்சர் திரு. வி.கே. ராஜீவ் கூறியுள்ளார்.

4. அவைக் குறிப்பிலிருந்து நீக்குவதாக அறிவிக்கப்பட்ட சட்டப்பேரவை நடவடிக்கைகள் சமூக வலைதளங்களில் ஒளிபரப்படுவது குறித்து எதிர்கட்சித்தலைவர் திரு. உதயநிதி ஸ்டாலின் கண்டனம் தெரிவித்துள்ளார்.

5. தமிழக டெல்டா மாவட்ட விவசாயிகளின் ஜீவநாடியாக விளங்கும் மேட்டூர் அணை 93-வது ஆண்டில் இன்று அடியெடுத்து வைக்கிறது.

## இனி விரிவான செய்திகள்

…………

## பிரதமர்

பிரதமர் திரு. நரேந்திரமோடி புதுதில்லியில் The Economics Times உலகத் தலைவர்கள் கூட்டமைப்பு மன்றத்தில் இன்று உரையாற்றுகிறார்.

நம் நாட்டின் எதிர்கால பொருளாதாரம் குறித்த தமது எண்ணங்களை பிரதமர் இதில் பகிர்ந்து கொள்கிறார்.

மாறிவரும் உலகளாவிய பொருளாதார சூழில் நம்தேசத்தின் பங்களிப்பு குறித்து இதில் விரிவாக விவாதிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பல்வேறு நாடுகளின் தலைவர்கள், வர்த்தக பிரதிநிதிகள், முதலீட்டாளர்கள் உள்ளிட்டோர் பங்கேற்கும் இந்த கூட்டத்தில் செயற்கை நுண்ணறிவு, மாறிவரும் உலக அரசியல் நிலைமை போன்றவை குறித்தும் ஆராயப்படுகிறது.

…………

## நிர்மல் குமார்

தமிழகத்தில் சூரிய மேற்கூரை அமைப்புகளை ஊக்குவிக்க ஒருங்கிணைந்த வழிகாட்டுதல் திட்டம் வகுக்கப்பட்டு வருவதாக மாநில எரிசக்தி துறை அமைச்சர் திரு. நிர்மல் குமார் தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் சட்டம் மற்றும் எரிசக்தி மானிய கோரிக்கையை இன்று தாக்கல் செய்த அமைச்சர், மின்நுகர்வோருக்கு தொடக்கத்திலிருந்தே வழிகாட்டுதலுடன் தேவையான அனைத்து ஒருங்கிணைப்பு உதவிகளும் வழங்கப்படும் என்றார்.

திருச்சி சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோவிலில் முதற்கட்டமாக சூரிய மேற்கூரை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறினார்.

சிறைகள் மற்றும் சீர்த்திருத்தப்பணிகள் துறையில் சிறந்த நடைமுறைகளை ஆய்வு செய்து அவை அமல்படுத்தப்படும் என்றார்.

27 சிறைச்சாலைகள் மற்றும் சிறைத்துறை தலைமையகத்தில் 160 கூடுதல் காணொலி உபகரணங்கள் நிறுவும் பணிகள் நடைபெற்று வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சட்டம் ஒழுங்கை நிலைநாட்டவும், ஜனநாயக அமைப்புகளின் மீது பொதுமக்களின் நம்பிக்கையை வலுப்படுத்தவும், நீதித்துறையில் தேவையான ஆதாரங்களையும், நிர்வாக உதவிகளையும் அரசு உறுதி செய்யும் என்றும் அமைச்சர் திரு. நிர்மல் குமார் கூறியுள்ளார்.

……. .

<u>ரமேஷ்</u>

தமிழகத்தில் ஆயிரம் ஆண்டுகளில் பழமைவாய்ந்த திருக்கோவில்களை பழமை மாறாமல் புனரமைக்க ஆண்டுதோறும் 125 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருவதாக மாநில இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. ரமேஷ் தெரிவித்துள்ளார்.

பேரவையில் தமது துறைக்கான மானிய கோரிக்கையை இன்று தாக்கல் செய்து பேசியஅவர், கிராமப்பகுதிகள் உள்ளிட்ட திருக்கோவில்களில் திருப்பணிகளை மேற்கொள்ள இரண்டரை லட்சம் ரூபாய் நிதி வழங்கப்பட்டு வருவதாக கூறினார்.

10 வல்லுநர்களை கொண்ட மண்டல மற்றும் மாநில அளவிலான குழுக்கள் அமைக்கப்பட்டு அதனடிப்படையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

……

<u>கொசஸ்தலை</u>

கொசஸ்தலை ஆற்றில் மீன்கள் இறந்து மிதந்த சம்பவம் குறித்து ஆய்வு செய்ய மீன்வளத்துறை இணை இயக்குநர் தலைமையில் 4 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டு விசாரணைக்கு உத்தரவிடப் பட்டுள்ளதாக மாநில

சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. வி.கே. ராஜீவ் தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் அ.இ.அ.தி.மு.க. சட்டமன்ற குழுதலைவர் திரு. எடப்பாடி கே. பழனிச்சாமி கொண்டு வந்த சிறப்பு கவன ஈர்ப்பு தீர்மானத்திற்கு பதிலளித்த அமைச்சர், இந்த குழு அளிக்கும் அறிக்கைக்கு பின்னர் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

ஆற்றில் இறந்து மிதந்த 2 ஆயிரத்து 150 கிலோ மீன்கள் அனைத்தும் உடனடியாக அப்புறப்படுத்தப் பட்டதாகவும் அமைச்சர் கூறினார்.

இந்த தீர்மானத்தின் மீது பேசிய தி.மு.க. உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு, பா.ம.க. உறுப்பினர் திரு. கணேஷ்குமார் ஆகியோரும் இச்சம்பவத்தால் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், மாசு கட்டுப்பாட்டு வாரியம் இதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் வலியுறுத்தினர்.

இந்த சம்பவம் தொடர்பான தகவல் கிடைத்த உடனேயே மாசு கட்டுப்பாட்டு வாரியத்தினர் உரிய ஆய்வுகளை மேற்கொண்டதாக அமைச்சர் திரு. ராஜீவ் பதிலளித்தார்.

……

<u>உதயநதி</u>

அரசு கடும் நிதி நெருக்கடியில் உள்ள நிலையில், அனைத்து உறுப்பினர்களுக்கும் கார் என்ற அறிவிப்பை தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் ஏற்கப் போவதில்லை என்று எதிர்கட்சித் தலைவர் திரு. உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் இன்று இதுதொடர்பான விவாதத்தில் பேசிய அவர், அதேவேளையில் ஏழ்மையான உறுப்பினர்களுக்கு கார் வழங்குவதில் ஆட்சேபனை இல்லை என்றார்.

இந்திய கம்யூனிஸ்ட் உறுப்பினர் திரு. தளி ராமச்சந்திரன், பா.ம.க. உறுப்பினர் திரு. கணேஷ்குமார்

ஆகியோரும் தங்கள் கட்சி உறுப்பினர்களுக்கும் கார் தேவையில்லை என்று கூறினர்.

இதனை தொடர்ந்து பேசிய பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. ஆதவ்அர்ஜுனா இதுதொடர்பான முதலமைச்சரின் அறிவிப்பு பொதுவானது என்றும்,

ஆளும் கட்சி தரப்பில் வசதியில்லாத உறுப்பினர்கள் காரை பெற்றுக் கொள்வார்கள் என்றும் தெரிவித்தார்.

…….

J.C.D. பிரபாகர்

சட்டப்பேரவை நடவடிக்கைகள் நேரடியாக ஒலிபரப்பு செய்யப்படுவதால் அவைக் குறிப்பிலிருந்து நீக்குவதாக அறிவிக்கப்பட்ட பகுதிகள் சமூக வலைதளங்களில் ஒளிபரப்பாவது குறித்து எதிர்கட்சித்தலைவர் திரு. உதயநிதி ஸ்டாலின் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதற்கு பதிலளித்த பேரவைத்தலைவர் திரு. J.C.D. பிரபாகர், இப்பிரச்சனை உரிமைக் குழுவின் ஆய்வுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும், இதன் பின்னர் இதுகுறித்து பரிசீலிக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

ஆளுங்கட்சி, எதிர்கட்சி உறுப்பினர்கள் என்ற பாகுபாடில்லாமல் பேரவை நிகழ்வுகள் நேரலையில் ஒளிபரப்படுவதாகவும் பேரவைத்தலைவர் குறிப்பிட்டார்.

…..

பிரிக்ஸ்

பிரிக்ஸ் தொலைத்தொடர்பு அமைச்சர்களின் 12-வது கூட்டம், மத்திய தொலைத்தொடர்பு அமைச்சர் திரு. ஜோதிர் ஆதித்யா சிந்தியா தலைமையில் புனேயில் தற்போது நடைபெற்று வருகிறது.

பிரிக்ஸ் உறுப்பு நாடுகளின் தொலைத்தொடர்பு அமைச்சர்களும், உயரதிகாரிகளும் இதில் பங்கேற்றுள்ளனர்.

தகவல் தொடர்பு தொழில்நுட்ப ஒத்துழைப்பை வலுப்படுத்துதல், மின்னணுமயம், படைப்பாற்றல் திறன்,

புதுமையான சிந்தனைகள், டிஜிட்டல் கட்டமைப்பு திறன்களை மேம்படுத்துவது குறித்து இதில் விரிவாக ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

இதனிடையே தொலைத்தொடர்பு ஒத்துழைப்பை வலுப்படுத்தும் புரிந்துணர்வு ஒப்பந்தம் இந்தியா - பிரேசில் நாடுகளுக்கு இடையே இன்று கையெழுத்தானது.

இந்த ஒப்பந்தத்தால் சைபர் பாதுகாப்பு, டிஜிட்டல் பொது கட்டமைப்பு, உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளில் இருதரப்பு ஒத்துழைப்பு மேலும் விரிவடையும் என்று மத்திய அமைச்சர் திரு. ஜோதிர் ஆதித்ய சிந்தியா நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பான உள்ளடக்கிய டிஜிட்டல் எதிர்காலத்திற்கு இந்த உடன்படிக்கை வழிகோலும் என்றும் அவர் மகிழ்ச்சி வெளியிட்டார்.

இந்நிலையில் பிரிக்ஸ் சுற்றுலா அமைச்சர்களின் கூட்டம் இன்று பிற்பகல் ஜெய்ப்பூரில் நடைபெறுகிறது.

சுற்றுலா, தடையற்ற போக்குவரத்து, சுற்றுலாவில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் உள்ளிட்டவை குறித்து இதில் விரிவாக விவாதிக்கப்படுகிறது.

……..

## உச்சநீதிமன்றம்

நீதித்துறை சார்ந்த தேர்வுகளை எழுத இளநிலை சட்டப்பிரிவு மாணாக்கருக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்து 3 ஆண்டுகள் கட்டாய பயிற்சி காலத்தை தற்போது ஓராண்டாக குறைத்து உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

தலைமை நீதிபதி சூரியகாந்த் தலைமையிலான அமர்வு, இதுதொடர்பாக சென்ற ஆண்டு மே மாதம் வழங்கிய தீர்ப்பை மாற்றியமைத்து இந்த புதிய உத்தரவை இன்று பிறப்பித்தது.

………

மனோஜ் ஜோஷி

நாட்டின் மருத்துவ ஒழுங்குமுறை கட்டமைப்புகளை மறுவடிவமைப்பு செய்ய ஏதுவாக மருத்துவ உபகரண தொழிற்சாலைகள், கூடுதல் பங்களிப்பு வழங்க வேண்டியதன் அவசியத்தை மத்திய மருந்தியல் துறை செயலர் திரு. மனோஜ் ஜோஷி வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் இந்திய தொழில்கூட்டமைப்பின் மருத்துவ தொழில்நுட்ப உச்சிமாநாட்டில் இன்று உரையாற்றிய அவர், இவ்விவகாரத்தில் தொழிற்சாலைகள் மற்றும் அரசுக்கு இடையே வலுவான பேச்சுவார்த்தைகள் அவசியம் என்றார்.

மருத்துவ உபகரணங்களின் வடிவங்களையும், உற்பத்தி பொருட்களையும், தீவிர பரிசோதனைக்கு உட்படுத்துவது அவசியம் என்றும் குறிப்பிட்டார்.

……..

மேட்டூர் அணை

தமிழக டெல்டா மாவட்ட விவசாயிகளின் ஜீவநாடியாக விளங்கும் மேட்டூர் அணை 93-வது ஆண்டில் இன்று அடியெடுத்து வைத்துள்ளது.

1934-ம் ஆண்டு இதேநாளில் இதன் கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்

.. வாய்ஸ் ..

……….

திருச்சி வாய்ஸ்

ரயில் விபத்துகளின் போது மீட்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்த ஒத்திகை நிகழ்ச்சி, திருச்சி ரயில்வே சார்பாக இன்று நடைபெற்றது.

இந்த ஒத்திகை நிகழ்ச்சி தத்ரூபமாக நடைபெற்றதாக தேசிய பேரிடர் மீட்புப்படை அதிகாரி தெரிவித்துள்ளார்.

.. வாய்ஸ் ..

……..

இருவரி

தூத்துக்குடி மாவட்டத்தில் கடந்த 3 நாட்களுக்காக மீன்பிடிக்க செல்லாமல் இருந்த மீனவர்கள் இன்று கடலுக்கு சென்றனர்.

……..

பேட்மிண்டன்

புதுதில்லியில் நடைபெறும் உலக பேட்மிண்டன் சாம்பியன்பட்ட போட்டியின் மகளிர் இரட்டையர் அரையிறுதிக்கு ட்ரீஷா ஜாலி, காயத்ரி கோபிசந்த் இணை முன்னேறியது.

காலிறுதியில் சீன இணையை 16-21, 21-15, 21-13 என்ற செட்களில் இந்திய இணை இன்று வென்றது.

………